# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 56/2021 Deposition of Witness for : P.W.**

| | | | |
|---|---|---|---|
| Name | : பேரானந்தம் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 22-10-2025

**முதல் விசாரணை**

தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவமனை மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறேன் கடந்த 24.10.2018 ஆம் தேதி கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணியில் இருந்த போது மூலனூர் காவல் நிலைய குற்ற எண் 287/2018 வழக்கில் சம்பந்தப்பட்ட அடையாளம் தெரியாத சுமார் 35 முதல் 40 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி மூலனூர் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் வழங்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் தலைமை காவலர் ராஜு என்பவர் மூலம் பெறப்பட்டது. பிரேத பரிசோதனை அன்றைய தினம் மதியம் 2.40 மணி அளவில் துவங்கப்பட்டது. பிரேதத்தின் உடல் முழுவதும் அழுகிய நிலையில் காணப்பட்டது. பிரேதத்தின் கை மற்றும் கால் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டன. பிரேதத்தின் முகம் மார்பு வயிறு பிறப்புறுப்பு வீங்கி காணப்பட்டது. சிறிது முதல் நடுத்தர அளவிலான புழுக்கள் பிரேதத்தின் உடல் முழுவதும் காணப்பட்டது. இறப்பிற்கு பின்னான தோல் உரிதல் பிரேதம் முழுவதும் காணப்பட்டது. பிரேதத்தின் மீது காணப்பட்ட இறப்புக்கு உட்பட்ட காயங்கள் பின்வருமாறு

1. நடுத்தலையில் 5 X 3 சென்டிமீட்டர் இண்டு எழும்பின் ஆழம் வரை ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

2. இடது மண்டையில் 6 X 5 cm into எழும்பின் ஆழம் வரையில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

3. வலது முன் மண்டையில் 5 X 3 சென்டிமீட்டர் எலும்பின் ஆழம் வரையிலான

சிதைந்த காயம் ஒன்று காணப்பட்டது

4. வலது மண்டையில் 6 x 4 எலும்பு ஆழம் வரையிலான சிதைந்த காயம் ஒன்று காணப்பட்டது.

5. இடது மேல் உதட்டின் உட்புரத்தில் 2 X 1 சென்டிமீட்டர் அளவிலான கன்றிய காயம் காணப்பட்டது

6. இடது கீழ் தொடை பகுதியில் 6 X 5 சென்டிமீட்டர் அளவிலான கன்றிய காயம் காணப்பட்டது.

7. மண்டைத் தோலின் அடிப்பிறத்தில் 7 X 5 சென்டிமீட்டர் அளவிலான கன்றிய காயம் முன் நடு மண்டை பகுதியில் காணப்பட்டது.

8. இடது முன் மண்டை பகுதியில் 6 x 5 cm அளவிலான கன்றிய காயம் காணப்பட்டது

9. வலது முன் மண்டை பகுதியில் 7x5 cm அளவிலான கன்றிய காயம் காணப்பட்டது.

10. வலது பின் மண்டை பகுதியில் 7x4 சென்டிமீட்டர் அளவில் கன்றிய காயம் காணப்பட்டது

11. வலது பின் மண்டை கபால எலும்பில் 2 சென்டிமீட்டர் அளவிலான எலும்பு முறிவு காணப்பட்டது

12. கபாலத்தின் முன் நடு மண்டைப் பகுதியில் 5 சென்டிமீட்டர் அளவிலான உள்வாங்கிய எலும்பு முறிவு காணப்பட்டது

13. வலது விலா ஏழும்பு இரண்டு முதல் ஆறு வரை சிதைந்தும் இடது விலா எலும்புகள் இரண்டு முதல் 8 வரை உடைந்தும் அதை சுற்றிய திசுக்கள் கன்றியும் காணப்பட்டது

14. இரண்டு மார்பு அறைகளிலும் 300 மில்லி லிட்டர் அளவிலான திரவ ரத்தம் காணப்பட்டது.

<u>**இதர தடயங்கள்**</u>

இரைப்பையில் சுமார் 10 மில்லி அளவிலான திரவம் அழுகிய வாடையுடன் காணப்பட்டது. மூச்சுக் குழாய் மற்றும் உணவுக் குழாயை ஆய்வு செய்தபோது அதில் மண் துகள்கள் காணப்பட்டன. ஏனைய உடல் உள்ளுறுப்புகள் அழுகிய நிலையில் காணப்பட்டன. உடல் உள்ளுறுப்புகள் ரசாயன பகுப்பாய்வுக்காகவும் ரத்தம் பகுப்பாய்வுக்காகவும் வலது தொடை எலும்பு மரபணு பரிசோதனைக்காகவும் சேகரித்து வைக்கப்பட்டது.

<u>**கருத்துரை**</u>

இறந்த நபர் அவரது உடலில் ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களின் விளைவாக வெளியேறிய ரத்தம் மற்றும் அதிர்ச்சியினால் இறந்துள்ளார் என குறிப்பிட்டு சடலக்கூறாய்வு அறிக்கை வழங்கினேன். ஆய்வாளர் வழங்கிய வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.12** சடலக்கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ.13** ஆகும், ரசாயன பகுப்பாய்வுக்கான அறிக்கை பெறப்பட்டு நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.சா.ஆ.14**. மேற்படி வழக்கு தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்னிடம் மேற்படி பிரேதம் தொடர்பான கேள்வி பதில் வடிவிலான ஏதேனும் கோரிக்கை விடுத்தாரா என்றால் இல்லை. புலன் விசாரணை அதிகாரி என்னிடம் கருத்துரை பெறுவதற்கு முன்பு ஏதேனும் ஆயுதங்களை காட்டி கருத்துரை பெற்றாரா என்றால் அது குறித்து நினைவில்லை. ஒரு பிணம் அழுகும் போது திசுக்களில் நிறமாற்ற வாயு வெளியேற்றம் திசுக்கள் திரவமாகுதல் ஆகிய மூன்று நிலைகள் ஏற்படும் என்று சொன்னால் அதுவும் ஏற்படும். திசுக்களில் உள்ள திரவம் முதலில் பச்சை நிறமாக மாறி அதன் பிறகு இறுதியாக கருப்பு நிறமாக மாறும் என்று சொன்னால் சரியல்ல. வயிற்றுப் பகுதியில் வாயு உற்பத்தியாகும் என்று சொன்னால் சரிதான். மேற்படி வாயுக்கள் வெளியேறும் போது துர்நாற்றம் வெளிப்படும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு அழுகுவதற்கு முன்பு இறப்பிற்கு முன்பு அல்லது பின்பு ஏற்பட்ட காயங்களிலிருந்து ரத்தம் வெளியேறும் என்று சொன்னால் சரியல்ல. பிரேதத்திலிருந்து கொப்புளங்கள் ஏற்பட்டு அதிலிருந்து புழுக்கள் வெளிப்படும் என்று சொன்னால் சரிதான். இறப்பிற்கு பின்பு 72 மணி நேரம் கழித்து பிரேதம் வீங்க துவங்கும் என்று சொன்னால் சரிதான். திறந்த வெளியில் இருக்கும் பிணம் அழுகுவதைவிட நீரில் இருக்கும் பிணம் அழுகுவதற்கு கால தாமதம் ஏற்படும் என்று சொன்னால் சரிதான். மண் நிறைந்த பகுதி அல்லது சேற்றுப் பகுதியில் விழுந்து இறக்கும் போது அவரது குரல்வளை மற்றும் மூச்சு குழாயில் மண்படிவதற்கு வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் சரி அல்ல. அவ்வாறு படியும் என்றாலும் நான் படியாது என்று தவறாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரி இல்லை. நான் பரிசோதனை செய்த பிரேதத்தில் மூச்சுக்குழாயில் சகதி படிந்து இருந்தது என்றாலும், அதை நான் என்னுடைய சடலக்கூராய்வு அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக ஒரு நபர் அதிக அளவில்

மது குடிக்கும் பழக்கம் கொண்டவராக இருந்தால் அவர் செயல்பாட்டில் மாற்றங்கள் ஏற்படும் என்று சொன்னால் அனைவருக்கும் ஏற்பட வாய்ப்பு இல்லை. சிலருக்கு ஏற்படலாம். விலா எலும்புகளில் ஒன்று முதல் மூன்று விலா எலும்புகள் மற்ற எலும்புகளை விட கடினமானது என்று சொன்னால் சரியல்ல. மற்ற விலா எலும்புகள் மற்றும் விலா எலும்புகள் விட ஒன்று முதல் மூன்று விலா எலும்புகள் கடினமானவை என கருத்துறை வழங்கப்பட்டிருந்தால் அது அவர்களுடைய தனிப்பட்ட கருத்தாகும். சடலக்கூராய்வு அறிக்கை மற்றும் இறுதி கருத்துரை மேற்படி இறந்து போனவரின் இறப்பு சடலக்கூராய்வு செய்வதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்பு ஏற்பட்டிருக்க கூடும் என நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். ஒரு நபர் இறந்த பிறகு அவர் உட்கொண்ட உணவு மற்றும் நீர் ஆகியவை 72 மணி நேரத்தில் வெளியேறிவிடும் என்று சொன்னால் உயிரோடு இருந்தால் வெளியேறும் இறந்திருந்தால் வெளியேற வாய்ப்பில்லை. இறக்கும்போது என்ன நிலைமையில் இருந்ததோ, அதே நிலைமையில் இருக்கும் திறந்தவெளியில் ஒரு பிணம் கிடக்கும் போது துர்நாற்றம் காரணமாக பறவை மற்றும் விலங்குகளால் மேற்படி பிரேதம் சேதப்படுத்தப்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய இறுதிக்கருத்துறையில் மேற்படி இறந்து போன நபர் ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஏற்பட்ட காயத்தின் ரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியால் இறந்ததாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான் .

**<u>மறுவிசாரணை:-</u>**

என்னிடம் காட்டப்படும் சா.பொ.11 ஓடைக்கல்லினால் இறந்து போன நபரின் பிரேதத்தில் காணப்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

குறுக்கு விசாரணை நீதிமன்ற அனுமதியுடன் சா.பொ.11 ஓடைக் கல்லை இதுவரையில் என்னிடம் அரசு தரப்பில் காட்டி என்னிடம் கருத்துரை பெறவில்லை என்றால் சரிதான்

2ம் எதிரி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக் கொண்டார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.24 18:58:15 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.